Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

24.10.2023
**ஊடக வெளியீடு**

**IR. K.பத்மநாதன்**
**தலைமை நிர்வாக அதிகாரி,**
PBAHB மற்றும் PBAPP.

**மெங்குவாங் அணை: பினாங்கு விரிவாக்கத் திட்டத்தின் முழு நிறைவுக்காக காத்திருப்பதில் எவ்வித தவறும் இல்லை**

- **இன்றுவரை அணையின் கட்டிட வயது, சேமிப்பு அல்லது கட்டமைப்பில் எந்த பிரச்சனையும் இல்லை.**
- **2020, அக்டோபரில் மத்திய அரசு EMD-ஐ பினாங்கு மாநிலத்திடம் மீண்டும் ஒப்படைத்தது.**
- **பினாங்கு, மத்திய அரசால் மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டத்தை (MDEP) முழுமையாக முடிக்க ஆவலுடன் காத்திருக்கிறது.**

பினாங்கு, செவ்வாய், 24.10.2023: பினாங்கின் மிகப் பெரிய அணையான 86.4 பில்லியன் லிட்டர் விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை (EMD) திட்டத்தில் எந்தத் தவறும் இல்லை என்பதை பினாங்கு நீர் விநியோக வாரியம் தெளிவுபடுத்த விரும்புகிறது.

உண்மையில், ரிம1.2 பில்லியன் மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டம் (MDEP) மத்திய அரசால் முழுமையாக முடிக்கப்படுவதை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். MDEP திட்டத்தின் பின்வரும் கட்டங்கள் நிறைவுப்பெறவில்லை:

| நிறைவுப்பெறாத கட்டங்கள்: | | |
|---|---|---|
| 1. | **கட்டம் 2பி** | ஒரு நாளைக்கு 600 மில்லியன் லிட்டர் (MLD) நீரை விநியோகிக்கும் திறனை மேம்படுத்த நீண்ட குழாய் பதித்தல். |
| 2. | கட்டம் 2சி | சுங்கை மூடாவில் புதிய 440 MLD பம்பிங் நிலையத்தை நிர்மாணிப்பதன் மூலம் , மழைக் காலங்களில் EMD-ஐ திறம்பட நிரப்ப முடியும். |

| | | |
|---|---|---|
| 3. | **புதிய சுங்கை மூடா தடுப்பணை** | **மழைக் காலங்களில் EMD-ஐ மீண்டும் நிரப்ப ஆற்றில் இருந்து மூல நீரை கூடுதலாக பெறுவதை ஆதரிக்க உதவும்.** |

23.10.2023 அன்று, தேசிய நீர் சேவை ஆணையத்தின் (SPAN) கூற்றுப்படி, மலேசியாவில் உள்ள 7 "அதிக ஆபத்துள்ள அணைகளில்" மெங்குவாங் அணையும் ஒன்று என பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

PBAPP செய்தி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற 6 அணைகள் குறித்து கருத்து தெரிவிக்க முடியாது. எவ்வாறாயினும், EMD நிச்சயமாக அதிக ஆபத்துள்ள அணை அல்ல என்பதை நாம் குறிப்பிட கடமைப்பட்டுள்ளோம்.

**இதன் கட்டிடத்தின் வயது 3 மற்றும் பினாங்கு மாநிலத்திற்கான அவசியத்தை நீருபித்துள்ளது.**

EMD அதன் அதிகபட்ச சேமிப்புத் திறன் 22 பில்லியன் லிட்டரிலிருந்து 86.4 பில்லியன் லிட்டராக விரிவாக்கப்பட்டப் பின்னர், சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு அக்டோபர் 2020 இல் பினாங்கு மாநில அரசாங்கத்திடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பினாங்குக்கு EMD அதன் அவசியத்தை நிரூபித்தது. கெடாவில் ஏற்பட்ட 3 விபத்துகளினால் இருந்து எழுந்த 3 பெரிய திட்டமிடப்படாத நீர் விநியோக பிரச்சனைகளுக்கு PBAPP இன் அவசர தீர்வாக EMD இல் இருந்து மூல நீர் பெறப்பட்டது:

- 2022 ஜூலை, “பாலிங் வெள்ள நீர் 1” சம்பவம்;
- 2023, மே இல் “சுங்கை மூடா நதியில் நீர் மட்டம் திடீர் சரிவு” சம்பவம்; மற்றும்
- 2023,செப்டம்பர் இல் “பாலிங் வெள்ள நீர் 2” சம்பவம்.

EMD இல்லாமல், இந்த சம்பவங்களின் தாக்கம் பெரும்பாலான பினாங்கு நீர் பயனீட்டாளருக்கு மோசமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கும். மேலும், இந்த விபத்துகளுக்குப் பிறகு நீர் விநியோக சேவைகளை இயல்பாக்குவதற்கான கால அளவு கணிசமாக நீடித்துள்ளது.

எனவே, MDEP முழுமையாக முடிவதற்குள், செப்டம்பர் 2020 இல் EMD-யை திரும்பப் பெற பினாங்கு மாநில அரசு எடுத்த முடிவு சரியான வியூக முடிவு என நிரூபிக்கப்பட்டுள்ளது.

**2024இல் 300 MLD இலிருந்து 600 MLD ஆக நீர் விநியோகத் திறன் அதிகரிக்கப்படும்**

EMD இன் "முக்கிய பிரச்சனை" அதன் வரம்புக்குட்பட்ட அதிகபட்ச நீர் இருப்புத் திறன் 300 MLD ஆகும்.

எனவே, சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (WTP) அவசர மூல நீர் ஆதாரமாக சுங்கை மூடாவை EMD இன்னும் முழுமையாக "மாற்றுவழி" ஆக செயல்பட முடியாது. சுங்கை டுவா WTP க்கு அதன் சேவை பகுதியில் உள்ள 465,000 நீர் பயனீட்டாளர்களுக்குப் போதுமான சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்ய சுமார் 1,100 MLD மூல நீர் தேவைப்படுகிறது.

2024 ஆம் ஆண்டில் MDEP இன் கட்டம் 2பி இன் மறுதிட்டமிடப்பட்ட முடிவானது EMD இன் அதிகபட்ச நீரை விநியோகிக்கும் திறனை 600 MLD ஆக உயர்த்தும்.

பினாங்கில் மற்றொரு "சுங்கை மூடா சம்பவம்" நிகழும் போதெல்லாம், பினாங்கில் மற்றொரு பெரிய நீர் விநியோக பிரச்சனை ஏற்படும் அபாயத்தைக் குறைக்க, MDEP இன் அதிகபட்ச நீர் விநியோகிக்கும் திறனை 1,000 MLD ஆக உயர்த்துவதற்கு மேலும் குழாய்களை அமைக்க ஒரு தனித் திட்டத்தை மேற்கொள்ள PBAPP முன்மொழிகிறது.

இதற்கிடையில், MDEP இன் 2சி மற்றும் சுங்கை மூடாவில் புதிய தடுப்பணையை முடிக்க மத்திய அரசின் அன்பான ஒத்துழைப்பை நாங்கள் கோருகிறோம். இந்த விடுபட்ட இரண்டு கூறுகளும் முக்கியமானவை, ஏனென்றால் சுங்கை டுவா சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஒரு " stand-by " மூல நீர் ஆதாரமாக பணியாற்ற ஒவ்வொரு மழைப் பருவத்திலும் EMD முடிந்தவரை நீரை நிரப்பப்பட வேண்டும்.

இறுதியாக, EMD இல் எந்த தவறும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்த என்னை அனுமதிக்கவும். மாறாக, அணை தற்போது பினாங்கிற்கான ஒரு வியூக வறட்சி இருப்பு மற்றும் சுங்கை மூடா

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

**தொடர்பான விபத்துகளின் தாக்கத்தை குறைக்கும் ஒரு பயனுள்ள அவசர மூல நீர் ஆதாரமாக செயல்படுகிறது.**

**நன்றி.**

---


**எழுத்தாக்கம்** : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
**கார்ப்பரேட் தகவல் பிரிவு**
**மின்னஞ்சல்** :syarifah@pba.com.my